


உ




# பூர்ணபலம்

## ஆன்மீக மின் சஞ்சிகை (SPIRITUAL E-MAGAZINE)

ஸ்ரீமஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்ட் மாதவெளியீடு

(சித்திரை –APR – 2022)

ஸ்ரீ மகாபெரியவா பூர்ண பலத்துடன்



“லோகா சமஸ்தா சுகினோ பவந்து”

“நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே இராம என்ற இரண்டெழுத்தினால்”

# உள்ளடக்க அட்டவணை


தோரணவாயில் .......... 4

சமி கர்ப அஸ்வத்தம் (வன்னி மரம் பெற்றெடுத்த அரசமரம்) .......... 6

சில நல்ல பழக்கங்கள் .......... 8

நன் மொழிகள் .......... 10

சித்திரை விஷு – கணி காணுதல் .......... 17

நல்லதோர் அறிமுகம் .......... 18

பொறுத்தார் பூமி ஆள்வார் .......... 21

வழி காட்டினார் வரதர் .......... 23

பலன் தரும் பதிகங்கள் .......... 25

தெரிந்த புராணம், தெரியாத கதைகள் .......... 30

செல்வங்களின் கைவண்ணம் .......... 32

இந்த ஆன்மீக மின் சஞ்சிகை விற்பனைக்கு அல்ல.

ஆசிரியர்: கி. வேணுகோபால்
இணைஆசிரியர்: ச. இராஜலக்ஷ்மி

எண்ணம்மற்றும்வடிவம்: VVSS Trust-இன்நண்பர்கள்

அட்டை மற்றும் பக்கங்கள் 8, மற்றும் 30-இல் உள்ளபடங்கள் அனைத்தும் கூகிள் படத்தேடல் (Google Image Search) மூலமாய் பெற்றவை. இவை விளக்க நோக்கத்திற்காக மட்டுமே.

மற்ற படங்களின் அனைத்து உரிமைகளும் ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்டையே (VVSS Trust) சாரும்.

இந்த மாத பிரசுரம் வெளிவர உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் நன்றி.

# தோரணவாயில்

## ஆசிரியர் முன்னுரை

அன்பு சொந்தங்களுக்கு நெஞ்சார்ந்த நமஸ்காரம்/ஆசிகள்!

வரும், சித்திரை "சுபக்ருத்" வருஷம் நம் எல்லோருக்கும் சகல செளபாக்கியங்களையும் அளிக்கட்டும் என்று, நம் மஹாபெரியவாளையும், அன்னை காமாக்ஷியையும் பணிந்து வேண்டிக் கொள்கிறேன்.




கடந்த இரண்டரை வருடகாலமாகவே நமது நாடு மட்டுமல்ல. உலக நாடுகள் எல்லாமே **"கொரானா"** என்ற வியாதியின் தாக்கத்தால், அனைத்து செயல்களுமே முடங்கிப்போய். கிட்டத்தட்ட உலகமே ஸ்தம்பித்து போய் விட்டது. தனி மனிதர், வர்த்தகம், அரசாங்க நடவடிக்கைகள் என அனைத்துமே முடங்கி போயிற்று. பெற்றோர்கள் காலமானதற்குக் கூட பிள்ளைகள் வரமுடியாத நிலை. அப்பப்பா, போதும் போதும் இந்தக் கொடுமை என சொல்லும் அளவுக்கு அனுபவித்து விட்டது மனிதகுலம்.

தெய்வத்தின் கருணையால், இதன் தாக்கம் குறைந்து, இயல்புநிலை திரும்பி விட்டதாக. நமது அரசாங்கம் அறிவித்து இருக்கிறது. இருப்பினும், தனிமனித இடைவெளி, முகக்கவசம் முதலியவற்றை பின் பற்றி நாம் இன்னும் சில காலம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

இந்த புது வருடத்தை ஒட்டி ஒவ்வொரு ஊரிலும், கோவில்கள், மடங்கள், பஜனைக்கூடங்கள் என ஆங்காங்கு "பஞ்சாங்க படனம்"-எனும் நிகழ்வு நடைபெறும். நாம் எல்லோரும் சென்று

அதை ஸ்ரவணம் (கேட்டு) பயன் அடைய வேண்டும். புத்தாண்டு தினத்தன்று நமது குலதெய்வம், இஷ்ட தெய்வம், பெற்றோர்கள், பெரியோர்கள் ஆகியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று இந்த இனிய நாளை கொண்டாடுவோம். விசேஷமாக அன்று நம்மால் முடிந்த அளவு தான, தர்மங்கள் செய்து புண்ணிய கணக்கினை தொடங்குவோம்."ஈத்து உவக்கும் இன்பம் "-என்பார்களே அதை செய்வோம்.

ஆங்கில புத்தாண்டில் சிலர் சில விஷயங்களை செய்வேன் என உறுதி இருப்பார்கள் (New Year Resolution) அதுபோல நாமும் இந்த நாளில் சில உறுதி மொழிகளை ஏற்போம். வாரம் ஒருதடவை அல்லது மாதம் இரண்டு தடவை குடும்பத்துடன் கோவிலுக்கு செல்வோம்: பிராமணர்கள் இனியாவது தினம் சந்தியா வந்தனம் செய்வோம். தினம் சிறிய அளவில் நம் இல்லத்தில் உள்ள ஸ்வாமிக்கு பூஜை செய்வோம். வெளியிடங்களில் கண்ட உணவு பொருட்களையும் வாங்கி உண்ண மாட்டோம்: நம் குழந்தைகளுக்கு மாதம் ஒரு சுலோகம், தமிழ் பாடல்களை கற்றுக்கொடுப்போம். என நம்மாலான நல்ல விஷயங்களைச் செய்வோம் என உறுதி ஏற்போம். ஏற்பது மட்டுமல்ல; அதனை செயல் படுத்துவோம்.

இந்த புதிய ஆண்டில் இருந்து, "பழையனவெல்லாம் கழியட்டும்" புதியன பிறக்கட்டும். அதற்க்கு தெய்வத்தின் அருள் துணை இருக்கட்டும் என அனைவரையும், வாழ்த்தி வணங்குகிறேன்.

*நன்றி வணக்கம்!*

என்றென்றும் இறைப்பணியில்,

அன்புடன்,

கி. வேணுகோபால்

*****


# சமி கர்ப அஸ்வத்தம் (வன்னி மரம் பெற்றெடுத்த அரசமரம்)

இந்த விஷயம் சாத்தியமா?
இப்படி ஒரு மரம் இருந்ததா?
இருக்கிறதா என்ற கேள்வி எழலாம்.




இருந்தது, இருக்கலாம் என்பதே பதில். அதாவது பறவைகள், அரசமரத்தின் பழங்களை சாப்பிட்டு விட்டு. வன்னி மரத்தில் அமர்ந்து எச்சமிட்டு. எச்சத்தில் அந்த பழத்தின் விதைகள் இருந்து. அது வன்னி மரத்தின் இடுக்குகளில் விழுந்து. கால போக்கில் முளைத்தால் அதுதான் ஸமி கர்ப்ப அஸ்வத்தம் என்பது. இப்படியான மரம் ஆயிரத்தில் என் லக்ஷத்தில் ஒன்றே இருக்கும். அதுவும் மலை வனாந்தரங்களில் உள்ள காடுகளில். அந்த மரத்தில்தான், யாகங்களில் அக்னியை உண்டாக்க. அரணி கட்டை என்ற ஒரு கருவியை உருவாக்கினார்கள். இப்படியான அரணிக்கட்டைக்கு, அதன்மூலம் உருவான அக்னிக்கு (நெருப்புக்கு) அதி விசேஷமான சக்தி உண்டு என வேதங்கள் கூறுகின்றன.

கிருஷ்ண யஜுர் வேதம், தைத்ரீய சம்ஹிதையில் இது பற்றி விளக்கமாக கூறப்பட்டுள்ளது. மேலும் இதுபோன்ற சோமயாகம், வாஜபேயீ யாகம் மற்றும் இன்ன பிற யாகங்களை நடத்தும் முறை. அதற்காக பயன் படுத்தப்படும் மர பாத்திரங்கள், கரண்டிகள், இன்னின்ன மரத்தில்தான் செய்ய வேண்டும், இந்தந்த வகையில் அதன் நீளம், அகலம், உட்குழிவின் ஆழ அகலங்கள், கைப்பிடியின் நீளம் இவைகளை பற்றிய தெளிவான விளக்கங்கள் சொல்லப்பட்டு உள்ளது மிகவும் ஆச்சர்யமாக உள்ளது. அந்தந்த மரத்தின் குணாதிசயங்கள், அதன் மருத்துவ, ஆன்மீக பயன்களை பற்றி சொல்வது நமக்கு பிரமிப்பை உண்டாக்குகிறது. என்னே நம் மகரிஷிகளின் மகத்துவம். தீர்க்க தரிசனம்.




இதை பற்றி கட்டுரை எழுதியவர் ஒரு தாவர இயல் பேராசிரியர். அவர் பெயர் ஸ்ரீ ராகவா ஸ் பொட்டுப்பள்ளி மற்றும் பிரம்மஸ்ரீ வேதம் வேங்கட ராம சாஸ்திரி.

[Greatness of Trees - SAMI GARBHA ASVATHTHAM (Part 1)]

[Greatness of Trees - SAMI GARBHA ASVATHTHAM (Part 2)]



Special Thanks to Sri Raghava S Boddupalli, Indian Biotechnologist and Researcher in Botany. His generosity and botany research work goes beyond words. Research Document links of his articles referred,
https://sanskritdocuments.org/articles/Plant_Biology_of_Yajurveda_by_Raghava_Boddupalli.pdf
https://www.researchgate.net/publication/314550047_Sacrificially_Important_Trees_Revealed_in_Krsna_Yajur_Veda_Samhita-Their_Description_and_Uses

*****

# சில நல்ல பழக்கங்கள்

நமது வாழ்க்கையில் ஒரு சில நல்ல பழக்கங்களையாவது கைக் கொண்டு வாழ வேண்டும், நிறைய நற்பழக்கங்கள் இருந்தாலும். ஒரு சில நற்பழக்கங்களை கைக்கொண்டு வாழ்ந்தால் நலமே வாழலாம். அந்த ஒரு சில நற்பழக்கங்களில் ஒன்றை இப்போது காணலாம்.

**வைகறை துயில் ஏழு (அதிகாலையிலேயே எழுந்திரு)**

இதுதான், அதாவது விடியற் காலையில் படுக்கையை விட்டு எழுவது மிகச் சிறந்த நல்ல பழக்கம். ஏன் விடியற்காலையில் எழ வேண்டும். தற்காலத்தில் சொல்கிறார்கள். "வளி மண்டலத்தில் அப்போது ஓசோன் வாயு அதிகமாய் இருக்கிறது. அது நமது மனசு, புத்தி, ஆகியவற்றை தூண்டுகிறது. உடல் நல்ல நிலையில் இருக்க உதவுகிறது" என்று. நம் தாத்தா, பாட்டி போன்ற முன்னோர்களுக்கு எந்த அறிவாளி சொல்லிக்கொடுத்தான். அவர்கள் அதிகாலையிலேயே எழவில்லையா? அவர்கள் எல்லாம் வழி வழியாக இதனை நடைமுறை வாழ்க்கையில் அறிந்து அதனால் நடந்தார்கள்.



இதையேதான் ஆசாரக்கோவை என்ற பழம் பெரும் தமிழ் பாடல் சொல்கிறது,

*வைகறை யாமம் துயில் எழுந்து, தான் செய்யும்*
*நல் அறமும் ஒண் பொருளும் சிந்தித்து, வாய்வதின்*
*தந்தையும் தாயும் தொழுது எழுக!*
*என்பதே முந்தையோர் கண்ட முறை.*

அது சொல்கிறது. அதிகாலையில் எழுந்திருந்து, அன்றைக்கு நாம் என்னென்ன காரியங்களை செய்யவேண்டும் என்பதை சிந்தித்து. முன் செய்ய வேண்டியது என்ன? பிறகு செய்யவேண்டியது என்ன என்பதை யோசித்து ஒரு முறைப்படுத்திக் கொள். பிறகு உன் தாய் தந்தையரை வணங்கி உன் பணிகளை செய் இதுதான் நமது முன்னோர்கள் கண்டமுறை என்கிறது.

எவ்வளவு நல்ல பழக்கம் பாருங்கள். அதிகாலை வேளை அமைதியாக இருக்கும். அமைதியான சூழ்நிலை. ஜன்னலை திறந்து வைத்தால் ஜில் என்ற காற்று. சிந்திக்க, படிக்க, எழுத மிகச் சிறந்த காலம். நமது குழந்தைகளையும் அதிகாலை எழுதிருக்கச் சொல்லி பழக்க வேண்டும். ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டமாக இருக்கலாம். ஒரு பத்து நாட்கள் பழகி விட்டால் "பழக்கம். வழக்கம் ஆகிவிடும்"

நான் வயதானவன், எழுந்து என்ன செய்வது? என கேட்கிறீர்களா? உங்களுக்குத்தான் வேலை, அதிகமான வேலை, உங்கள் பேரன் பேத்திகளுக்கு உதவலாம். பாடம் சொல்லித் தரலாம். இறைவனை வழிபட அற்புதமான நேரம். வயதானவர்கள் உடனே குளிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பல் தேய்த்து, கை கால், முகம் அலம்பிக்கொண்டாலே போதும். சாமி அறையில் அமர்ந்து உங்களுக்கு தெரிந்த ஸ்தோத்திரம், துதிகளை சொல்லுங்கள். அந்த ஒலி வீட்டில் பரவி மங்களகரமான சூழ்நிலையை ஏற்படுத்தும். அதை பார்த்து உங்கள் பேரன் பேத்திகளும் உங்களோடு அமர்ந்து ஸ்தோத்திரம், சுலோகம் சொல்வார்கள். ஆக ஒரு நாளின் விடியல் மிக தூய்மையாக, மங்களகரமாக, சந்தோஷமாக அமையும். பிறகு என்ன? அந்த நாள் முழுவதுமே சந்தோஷமாக அமையும்.

*செய்து பாருங்கள், நான் சொல்வது புரியும்!!*

*****

# நன் மொழிகள்

### பாப புண்யங்கள்

(10-10-1932)

நாம் வயிறு நிறைய சாப்பிட்டுக்கொண்டு, குழந்தைகள், பந்துக்கள் முதலியவர்கள் கஷ்டப்படாமல் சாப்பிடும்படி செய்து வருவதற்காக க்ரஹஸ்த தர்மத்தில் சில கார்யங்கள் செய்து கொண்டு இருக்கிறோம். நம்முடைய மானத்தைக் காப்பாற்ற வஸ்திரமும், பசியைப் போக்க ஆகாரமும், இருப்பதற்கு வீடும், நம்முடைய குழந்தை முதலியவர்களைப் போஷிப்பதற்கு உரிய சௌகர்யங்களும் அமைவதற்காக, ஒரு லௌகீக காரியம் செய்வதைப் போல, எந்த லோகத்திலே போனாலும் சௌக்யமாயிருக்க ஒரு காரியம் செய்ய வேண்டும்.

ஒரு சந்தேகம் இப்போது ஏற்படுகிறது. வயிற்றுப்பாட்டு காரியத்திலேயே காலமெல்லாம் சரியாய் போகிறதே. தர்மம் செய்ய அவகாசம் இல்லையே; இந்த மாதிரி ஒரு சிரமம் தோன்றுகிறது. இப்படி சொல்லுகிறவர்கள் எல்லாம், பணம் சம்பாதிக்க தங்கள் காலத்தை எல்லாம் செலவழித்தாலும் பாதகமில்லை. வீண் பேச்சிலும் நினைவிலும் பரிகாசத்திலும், உத்ஸாகத்திலும், எவ்வளவோ காலம் வீணாக்கப் போகிறது. பணம் சம்பாதிக்கும் காலத்தை கணக்குப் போட்டுப் பார்த்து, மிச்சமுள்ள காலத்தை வீணாக செலவழிக்காமல் ஆத்மலாபமான காரியத்தை செய்யலாம். மனம் இருந்தால் அவகாசம் கிடைக்காமற் போகாது. டிராமிலும், மோட்டாரில், போகும்போது பகவத் நாமாவை, ஜெபித்துக் கொண்டே வரலாம். இப்பொழுது சம்பாதிக்கும் பணத்தில் ஒரு பைசாவாவது, நாம் இந்த உடம்பை விட்ட பிறகு வேறு லோகத்தில் ப்ரயோஜனப்படுமா? அந்த லோகங்களில் செலவாணி ஆகும் பணம் பகவத் நாமாதான். ஆகையால் அதை தவறாமல் ஜெபிக்க வேண்டும். அவகாசம் இல்லை என்பது பொய்.

நாம் நான்கு விதத்தில் தர்மம் செய்து வரலாம். சரீரத்தாலும், வாயாலும், மனத்தாலும், பணத்தாலும் செய்யலாம். தரித்ரதசையில் தானதர்மம் எப்படிச் செய்கிறது என்ற ஒரு சந்தேகம் தோன்றுகிறது. தரித்திரத்திலும் செலவைக் குறைத்து, ஒரு பைசாவாவது தர்மம் செய்யலாம். தினமும் ஒவ்வொருவரும் ஒரு பைசாவாவது, காலணாவாவது தர்மம் செய்ய சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும்.

தூங்குவதிலும், வம்புபேசுவதிலும், பரிகாசம் செய்வதிலும் ஒவ்வொருவருக்கும் எவ்வளவோ காலம் செலவழிகிறது. அவற்றை நிறுத்தி பகவானின் சரணங்களை த்யானம் செய்யலாம். அதுதான் வரவு; மற்றவை எல்லாம் செலவுதான். அவை எல்லாம் மாம்சத்திற்க்காக செலவழிக்கும் காலம். உடம்பும் மாம்சம்தானே; அது சம்பந்தமாக செலவழிப்பது மாம்சத்திற்காக செலவழிப்பது தானே.

நாம் மிகவும் பாபம் பண்ணியிருக்கிறோம் என்று பயப்படக்கூடாது. நம்மைப் போல இருந்தவர்கள் எவ்வளவோ பேர் பக்தர்கள் ஆகி இருக்கிறார்கள்...நம்மைவிட பாபியானவர்கள்

கூட நல்ல ஸ்திதிக்கு வந்திருக்கிறார்கள். பாபிகளை ரக்ஷிப்பதனால்தான் ஈஸ்வரனுக்கு பெருமை ஏற்படுகிறது. அதனால் நாம் தைரியமாக இருக்க வேண்டும்.

பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு சொல்கிறார்: சுலோகம்)-(கீதை)

"லோகத்தில் எல்லாப் பாபிகளிலும் மஹாபாபியாக வைத்துக் கொண்டாலும் பாபமாகிற சமுத்திரத்தை ஞானம் என்கிற ஓடத்தினால் நீ தாண்டி விடுவாய்"-என்று சொல்கிறார்.

**(கீதை சுலோகம்)**

நாம் பாபம் செய்து விட்டோம் என்று நினைத்து அழக்கூடாது."நான் உன்னை எல்லாப் பாபங்களில் இருந்தும் விடுபட செய்கிறேன்; அதனால் நீ அதைரியப்படாதே; அழாதே' என்று பகவான் சொல்கிறார்.

நாம் எப்படிப் பாபம் செய்கிறோம் என்பதை யோசித்துப் பார்க்கலாம். வாயாலும், மனதாலும், தேகத்தாலும் பணத்தாலும் நாம் பாப்பம் சிகிறோம். மனசில் கேட்ட நினைவுகளை நினைத்துப் பாப்பம் செய்கிறோம். வாயினால் உத்ஸாகமாகப் புரளி பண்ணி பாப்பம் செய்கிறோம். தேஹத்தால் கேட்ட காரியங்களை பண்ணிப் பாப்பம் செய்கிறோம். பணத்தினாற் பலவகையாகப் பாப்பம் செய்கிறோம். நாம் இந்தப் பாபங்களை பண்ணக்கூடாது என்று நினைத்தாலும் அப்படி இருக்க முடியவில்லை. பிசாசுபோலப் பாபம் பண்ணும் பழக்கம் நம்மைப் பிடித்துக் கொண்டிருக்கிறது; நம்மை விடாமற் சுற்றிக் கொண்டேயிருக்கிறது. பல காலமாகப் பாபம் பண்ணியிருக்கிறோம். அதனால்தான் அந்தப் பழக்கம் விடவில்லை. அந்தப் பழக்கத்தை எப்படி போக்குவது?

எந்த வலியினால் நாம் பாபம் பண்ணுகிறோமோ அந்த வழியிலேயே நாம் பழக்கத்தை மாற்றவேண்டும். முன்பு சொன்ன நான்கு மார்க்கங்களிலேயே அந்த முயற்சியை செய்ய வேண்டும், என்பது வேதம். பாபத்தை தர்மத்தால் நிவர்த்தி பண்ணு என்று அது சொல்லுகிறது.

தர்மம் என்பது என்ன? அதர்மத்திற்கு நேர் விரோதமானது தர்மம். கெடுதலுக்கு விரோதமானது நல்லது. அதுதான் தர்மம். கெடுதல் எது? நம்மை பாபம் பண்ணியாக வேண்டும் என்று தூண்டுகிறது தான்! ஒரு காரியத்தை ஆசைப் பட்டு பண்ணுகிறது பாபம். அந்த ஆசை நம்மை வழிய இழுத்து பாபம் புண்ணாகி செய்கிறது.

பாபம் என்பது என்ன? புண்ணியம் என்பது என்ன? நாம் எதை செய்யக் கூடாது என்று மனத்திற்குத் தோன்றுகிறதோ அதுதான் பாபம். எதை செய்வதகு நல்லது என்று தோன்றுகிறதோ அதுதான் புண்ணியம். மனிதன் எப்பொழுதும் புண்ணியத்தின் பலனைத்தான் விரும்புகிறான்.

## (சுலோகம்)

புண்ணியத்தின் பிரயோஜனம் கஷ்டம் இல்லாமல் சௌக்யமாக இருப்பது. அத ப்ரயோஜனத்தைத் தான் எல்லோரும் விரும்புகிறார்கள். அதனால் மனம் சாந்தத்தை அடைகிறது. ஆனந்தம் உண்டாகிறது. நமக்குப் புண்ணியத்தின் ப்ரயோஜனத்தில் ஆசை இருக்கிறதேயொழிய, நாம் பண்ணுவதில் பெரும்பாலானவைகள் பாபா காரியங்களாகவே இருக்கின்றன. நாம் பாபம் செய்வதற்கு நம் மனமே சாக்ஷியாக இருக்கிறது. புண்ணியம் பண்ணுகிற விஷயத்தில் சோம்பல் உண்டாகிறது. பாப காரியங்கள் பண்ணுவதில் ஓர் உத்ஸாகம் இருக்கிறது.

பாபத்தின் பலன் கஷ்டம். இது செய்யக் கூடாதென்று நம் மனசாட்சி தடுக்கும் காரியங்கள் பாப காரியங்கள். இது செய்ய வேண்டாமென்று எண்ணுவதுண்டு; ஆனால் செய்வதை விடுகிறதில்லை.

இந்த உலகத்தில் பிறந்த யாவர்க்கும் சுகத்தில் இச்சை உண்டு. புண்யமே செய்யவேண்டுமென்று நினைக்கிறார்கள். பாபமே செய்யக்கூடாது என்பதும் தெரியும். ஆனால், அவர்கள் செய்வதில் நூற்றுக்கு என்பது பங்கு பாபங்கள்தான். இருப்பது பங்கே புண்ணியம். இதை நினைத்தால் நிரம்ப வேடிக்கையாக இருக்கிறது. பாபம் வேண்டுமென்று நாம் ஆசைப்படுவதே இல்லை. ஆனாலும் பாப்பா மூட்டை மேலும் மேலும் ஏறிக்கொண்டே இருக்கிறது. இந்த ஆச்சரியத்தின் காரணம் தெரியவில்லை. என் இப்படி|? என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை. பல காலத்திற்கு முன்பே அர்ஜுனன் நம் அனைவருக்கும் சேர்த்துப் பகவானை கேட்டு இதற்க்கு பதில் வாங்கி வைத்து இருக்கிறான்.

## (கீதை III-36)

"மனிதன் பாபம் செய்கிறான். அவனுக்கு அதக்கிச் செய்ய ஆசை இல்லாத பொழுதே அவன் செய்கிறான். அவனைப் பாபம் பண்ண வைக்கிறது யார்?
உபத்திரவப் படுத்தி பாபம் செய்யச் சொல்கிற அந்தப் பேர்வழி யார்? பாபம் பண்ண வேண்டாம் என்றுதான் ஞாபகம்: பாபத்திற்கு கொஞ்சம் கூட இச்சை இல்லை. ஆனாலும் அவனைப் பாபம் பண்ண வைக்கும் ஆசாமி யார்?" என்று கேட்டான் அர்ஜுனன்.

பகவான் அதற்க்கு பதில் சொல்லி இருக்கிறார்: (கீதை III-37 மனிதனுக்கு ஒரு வஸ்து வேண்டும், என்ற ஆசை இருக்கிறது. அதை அடைய பிரயத்தனம் செய்கிறான். நியாயமான வழியில் அகப்படாவிட்டால் அநியாய வழியில் முயற்சி செய்கிறான். அதுதான் பாபம்; அந்தப் பாபத்திற்கு காரணமாக இருப்பது, வேண்டும் என்னும் ஆசை. அதைத்தான் காமம் என்று சொல்வார்கள். அது நமக்கு ஒரு சத்ரு. மற்றொன்று இருக்கிறது. அது க்ரோதம்--கோபம். ஒரு வாஸ்துவின் மேல் ஆசைப் பட்டால் அது கிடைக்காத பொழுது அதற்குத் தடையாக இருந்தவர்கள் மேல் க்ரோதம் உண்டாகிறது. ஆசைப்பட்ட பொருள் கிடைக்காத பொழுது கோபம் உண்டாகிறது. காமம் திருப்பப் பட்ட பொழுது கோபமாகிறது. ஆதலால் இரண்டையும் ஒன்றென்றே சொல்லிவிடலாம்.

ஒருசமயம் காமமாக இருப்பதே பின்பு கோபமாக ஆகிறது. ரப்பர் பந்தை சுவரில் எறிகிறோம். இருந்தபொழுது அது பின்பு திரும்பி வருகிறது. எறியப்படும் பொழுது அது காமம் போல் இருக்கிறது. திரும்பி வருவதை போல்வது க்ரோதம். காமம் நிறைவேறாவிட்டால் க்ரோதம் உண்டாகிறது என்று இந்த வாக்கியம் சொல்கிறது. காமம் எதனாலும் திருப்தி அடையாது. எவ்வளவு சாப்பிட்டாலும் அதற்க்கு போதாது. நாம் பசிக்கு ஆகாரம் கொடுத்தால் திருப்தி உண்டாகின்றது. ஆசை, ஆசைப்படும் வஸ்துவைக் கொடுத்தால் அடங்குவது இல்லை. அந்த வாஸ்து கிடைத்து விட்டதே என்று சமனம். அடைவது இல்லை. காமம் நெருப்பு போன்றது. நெருப்புக்கு ஆகாரம் கொடுக்க, கொடுக்க, அது பரவிபி பெருகும். அதைப் போன்றதே காமமும். ஆகாரம் போட்டு சமனம் உண்டாக்குதல் நெருப்புக்கு இல்லை. நெருப்புக்கு " கிருஷ்ணவர்த்மா என்று ஒரு பெயர் இருக்கிறது. அதற்குப் பெண்வழி எல்லாம் கருப்பை உண்டு பண்ணுவது என்பது அர்த்தம். நெருப்பு எங்கே போனாலும் பின்னால் கரியை உண்டாக்கிக் கொண்டே போகிறது. காமமும் அப்படித்தான். முதலில் சந்தோஷம் உண்டாகிறது. அப்புறம் மேலே மேலே கிடைக்கவில்லை என்று அழுகை உண்டாகிறது. ஆகாரம் கொடுக்கக் கொடுக்கக் காமம் விரிகிறது. காமம் ஒரு பெரும் பசிக்காரன். மகாசநன் என்று கூறப்படும்.

க்ரோதம், காமம் நிறைவேறாமல் திரும்பிவரும் பொழுது ஏற்படுவது. அது காமத்திலும் உயர்ந்தது. இது நைஷதத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது.

கலி வருகிறார். அவருடைய சேனாதிபதிகளாகிய காமன், க்ரோதன் முதலியவர்கள் உடன் வருகிறார்கள். ஸ்துதி பாடகர்கள் ஒவ்வொரு சேனாதிபதியின் பெருமையையும் எடுத்துச் சொல்லுகிறார்கள். க்ரோதனை பற்றியும் சொல்லப்படுகிறத.

## நைஷத காவ்யம்

காமம் புகாத இடமில்லை என்று சொல்வதுண்டு. காமன் பெரிய வீரன். ஆனால் க்ரோதன் அவனைக்காட்டிலும் பலவான். க்ரோதனுடைய கோட்டையில் காமன் பாணம் உள்ளே வராது. அந்தக் கோட்டைக்குள் இருந்து இந்திராதி தேவர்களையும் ஒருகை பார்ப்போம் என்று க்ரோதன் சொல்லுவான். அந்தக் கோட்டை எது? துர்வாசருடைய ஹ்ருதயந்தான் அது. அதற்குள் காமன் பாணம் செல்லாது.

நாம் செய்யும் பல பாப காரியங்களுக்கும் இந்தக் காமக் க்ரோதங்களே காரணமாக இருக்கின்றன. ரஜோ குணத்தால் இவை உண்டாகின்றன. பெரும்பசிக்காரன் காமன். பெரிய பாபி க்ரோதன். இவர்கள்தாம் நமக்குச் சத்ருக்கள்.

ஆசையின்றி ஒரு காரியத்தை செய்தால், அப்பொழுது பாபமில்லை. ஆசைப்பட்டு ஒன்றை செய்வதுதான் பாபம். பாபம் பண்ணிப் பண்ணிப் அந்தப் பழக்கம் பல காலமாக ஊறியிருக்கிறபடியால் அது இப்பொழுதும் பாபம் பண்ணச் செய்கிறது.

த்ரிகரணத்தாலும் பாபத்தைச் செய்கிறோம். மனத்தால் பலவகையான கேட்ட நினைவுகள் உண்டாகின்றன. அவை பாபம். வாக்கால் பொய் பேசுதல் முதலிய பாபத்தைச் செய்கிறோம். நமக்கு மாத்திரம் பகவான் வாக்கு கொடுத்தது எதற்காக? ஹ்ருதயத்தில் உள்ளதை சொல்லட்டும் என்று கொடுத்து இருக்கிறார். அப்படிச் செய்யாமல் பொய் சொன்னால், இவனுக்கு வாக்கு கொடுத்து பிரயோஜனமில்லை என்று வாயில்லா மாடாகப் பிறக்கச் செய்வார். நமக்கு வாக்கு கொடுத்து இருப்பது, சத்தியத்தை சொல்வதற்க்காகவும், பகவன் நாமாவை சொல்வதற்காகவுமே.

மனம், வாக்கு, உடம்பு, பணம் என்னும் நான்கினாலும் பாபம் பண்ணுகிறோம். ஆசைப்பட்டு ஒன்றைச் செய்தால் பாபம் உண்டாகிறது. முன்பு கூறிய நான்கினாலும் நல்ல காரியங்கள் செய்ய வேண்டும். கயிற்றை எப்படிச் சுற்றினோமோ அப்படியே அவிழ்க்க வேண்டும். எந்த நான்கினால் நாம் பாபம் பண்ணி பழகிக் கொண்டோமோ, அந்த நான்கினாலேயே புண்ணியம் செய்யப் பழக வேண்டும்.

பாபத்திற்கு இரண்டு சக்திகள் இருக்கின்றன. ஒரு கெட்ட பழக்கம் இருக்கிறது. உதாரணமாக பொடி போடும் பழக்கத்தைக் கவனிப்போம். அது இரண்டுவகைக் கெடுதலை உண்டாக்குகின்றது. அன்றைக்குப் போடும் கெடுதல் ஒன்று. நாளைக்கும் போடும்படி தூண்டும் கெடுதல் ஒன்று. ஆக, இரண்டு உண்டாகின்றன. அது போலவே பாப்பா காரியம் பின்னும் பல பாபங்களை செய்யும் பழக்கத்தை ஏற்படுத்துகிறது. அந்தப் பழக்கத்தை வாசனை என்று சொல்லுவோம். நாம் நல்ல வாசனையை ஏற்றிக்கொண்டு வரவேண்டும்; கெட்ட வாசனையாயி ஒழித்து வரவேண்டும்.

ஆகவே, எல்லாப் பாபமும் ஆசைப்படுவதால் உண்டாகின்றன என்று எண்ணி முன் கூறிய நான்கு வகையில் ஆசையில்லாமல் காரியங்களைச் செய்ய வேண்டும்.

நித்தியம் மனதினாலும், வாக்கினாலும், உடம்பினால், பணத்தினாலும் நல்ல காரியங்களை செய்து வரவேண்டும். நமக்குக் கிடைக்கும் பணத்தில் ஒரு தம்பிடியையாவது ஒவ்வொருநாளும் தர்மத்துக்காக உண்டியல் கட்டிப்போட வேண்டும். அந்தப் பணத்தைக் குடும்பத்திற்கு ப்ரயோஜனப்படுத்தாமல், தர்மத்திற்கு விநியோகப் படுத்த வேண்டும். நம்முடைய பணமெல்லாம் நம்முடையது அல்ல என்ற ஞாபகம் இருக்க வேண்டும். இந்த உடம்பு போனவுடன் அது நம்முடைய சம்பந்தத்தை விட்டுவிடும். அந்தப் பணத்தை நம்முடையதாக செய்யவேண்டுமானால், நாம் எங்கே போனாலும் செல்லக்கூடிய நோட்டாக மாற்றவேண்டும். மேலுலகத்தில் இந்தப்பணம் செல்லாது. இந்தப் பணத்தை தர்ம நோட்டாக மாற்றிவிட்டால், அது எங்கேயும் செல்லும். அப்பொழுது இந்தப் பணமும் நமக்கு சொந்தமாகும். ஆகையால் குழந்தை முதற் பெரியவர்கள் வரையில் தனித் தனித் தர்மத்திற்காக ஒரு உண்டியல் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் பிறந்தது முதல் இந்த மாதிரி பழக்கங்களை வைத்துக் கொண்டு இருந்தால், இதற்குள் எவ்வளவோ செய்து இருக்கலாம். நம்முடைய காரியத்தை நாம் மறந்து விட்டோம். குழந்தைகளுக்கு என்று இப்போதே தர்ம உண்டியலை ஏற்படுத்த வேண்டும்.

அவர்களுக்கு இன்ஷூர் செய்வதில்லையா? இந்த இன்ஷூரன்ஸ் இந்தப் பிறவிக்குப் பின்பும் (After Life) உபயோகப்படுமாதலால் இதை "After Life Insurance" என்று கருத வேண்டும்.

வாக்கினால் புண்ணியம் செய்ய வேண்டும். நித்தியம் ஆயிர பகவந் நாமாவையாவது சொல்ல வேண்டும். அது நமக்கு உபயோகப்படும். அன்றுயும் உபத்திரவம் வராமல் காக்கும். வீணாக வம்பு பேசுவதனால் பாபமும், அதனால் உபத்ரவமும் உண்டாகிறது. பகவந் நாமாவை சொல்வதால், அந்த உபத்ரவமும் இல்லை; மேலே புண்யமும் உண்டாகிறது. பகவானுக்கு பல நாமாக்கள் இருக்கின்றன. "பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானே" என்று பெரியவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவருடைய ஒரு நாமாவை ஆயிரம் தடவை சொல்ல வேண்டும். ஸித்தி பெற்ற பெரியவர்களிடம் அந்த நாமாவைக் கேட்டுக் கொள்ள வேண்டும். கணக்குக்காக கயிறு ஒன்றை வைத்துக் கொள்ளலாம். நாமாக பகவந் நாமாவை செல்வதானாலும் பாதகமில்லை.

மனதினால் நல்ல காரியம் செய்யவேண்டும். கொஞ்ச நாழிகை ஓரிடத்தில் இருக்க வேண்டும். பகவானை தியானம் செய்ய வேண்டும். நம்முடைய மனது பல நினைவுகளோடு இருக்கிறது. அது பெரிய சினிமாவைப் போல இருக்கிறது. ஹ்ருதயம் யாருடைய இடம் என்பதை அறிய வேண்டும்.

அது பகவானுக்குரிய இடம். அந்த இடத்தை நாம் குப்பைத் தொட்டியாக்கி இருக்கிறோம். அதை மெழுக்கிச் சுத்தப்படுத்தி அதிற் பகவானை உட்கார வைத்து நாமும் உட்கார வேண்டும். அதற்க்கு என்ன வழி? ஸ்வாமியின் பாதத்தை தியானம் செய்யவேண்டும். நித்தியம் ஐந்து நிமிஷமாவது தியானம் செய்யவேண்டும். எந்த விதமான சமயத்திலும் இது தவறாமல் நடக்கவேண்டும். ஸ்வராஜ்யம் வந்தாலும், வராவிட்டாலும் நடக்க வேண்டிய காரியம். இது சாப்பிடுவதைப் போன்றது.

இது அதைவிட அதிகம் என்றே சொல்லவேண்டும். ஆகாரம் செல்லாத காலத்திலும் இது அவசியம் செய்ய வேண்டியது. அப்பொழுது ஈச்வராநுக்கிரகம் உண்டாகும். அந்த அனுகிரகம் எல்லாவற்றுக்கும் அனுகூலம். பணம் சம்பாதிக்க எவ்வளவோ காலத்தைப் போக்குகிறோம். நமக்கு உண்மையில் ஆத்மலாபமாக இருக்கும் இந்தக் காரியத்தை குறைந்தபக்ஷம் அரைமணியாவது செய்யக் கூடாதா? அந்த அரை மணியும் தர்மப் பணத்தைச் சேர்க்கும் காலமாகும். மனம் த்யானத்தில் ஈடுபட்டால், வாய்க்கு முதலியன அதன்படியே நல்ல காரியம் செய்யும். உடம்பினால் நல்ல காரியம் செய்யவேண்டும். கோயிலுக்குப் போய் ப்ரதக்ஷிணம் செய்து நமஸ்காரம் செய்ய வேண்டும். தண்டம் சமர்ப்பித்தல் என்று நமஸ்காரத்தைச் சொல்வார்கள். தடியைப் போல் விழுவதுதான் அது. இந்த உடம்பு நமதன்று; அவரது என்று நினைத்து அவர் சன்னதியில் போட்டுவிட வேண்டும்.

இப்படிச் செய்வதனால் பாபம் தானாக நழுவி விடும். அகம்பாவம் குறையும். எவ்வளவுக்கு எவ்வளவு நாம் இறங்குகிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு மகிமை ஏறும்.

ஸ்த்ரீகள் பார்த்தாவை நமஸ்காரம் செய்தாலேபோதும். புருஷர்கள் கோயிலுக்குப் போவதில்லை என்று சங்கல்பம் செய்துகொண்டு விட்டபடியால் வர்களுக்கு சேர்த்து ஸ்த்ரீகள் கோயிலுக்குப் போய்வருகிறார்கள். கோயிலுக்கு அவர்கள் போகக்கூடாது என்பது இல்லை. அவசியமில்லை என்று கருதவேண்டாம். மூலலிங்கத்தை தரிசிப்பவர்கள் சிலர். த்வஜஸ்தம்பத்தைத் தரிசித்தாலே சிலருக்குப் போதும். கோபுர தரிசனத்தாலேயே சிலருக்குப் புண்ணியம் வந்துவிடும். ஸ்திரீகளுக்கு பார்த்தாவை வணங்குவதே போதும். அதிகாரிகளுக்கு ஏற்றபடி ஒவ்வோரிடம் இருக்கிறது. அதற்க்கு ஏற்றபடி தேகத்தை அர்ப்பணம் பண்ண வேண்டும்.

ஆகவே, நாம் நான்கு வகையிற் பாபம் பண்ணியிருக்கிறோம்; இன்னும் பண்ணி வருகிறோம். இதை நிறுத்துவதற்கு மாற்று தர்மம். அந்தத் தர்மத்தை த்ரிகரணத்தாலும் பணத்தாலும் செய்யவேண்டும். உடம்பினால் ப்ரதிக்ஷணம் முதலியவற்றை செய்யவேண்டும். இது எனதன்று; பகவானது என்று எண்ணித் தண்டம் சமர்ப்பிக்க வேண்டும். ஆலயம் இல்லாவிட்டால் ஸ்மரணம் செய்து கொண்டாவது செய்யலாம். வாக்கால் பகவந் நாமாவை சொல்ல வேண்டும். மனத்தால் சரணாரவிந்த த்யானம் செய்யவேண்டும். பணத்தால் தான தர்மம் செய்ய வேண்டும்.

நாம் பாபம் பண்ணாமல் இருந்தால் புண்ணியம் செய்யவேண்டாம். பாபம் பண்ணி இருக்கிறோமாகயால் அவசியம் இந்த தர்மங்களை செய்ய வேண்டும். குழந்தை முதல் விருத்தரவரை உள்ள எந்த பருவத்தினராயினும், எந்த ஜாதியாரானாலும் இந்த நான்கு வகையிலும் தர்மம் செய்தால்தான் பாபம் நிவர்த்தியாகும். புண்ணியபலம் ஏற ஏறப் பாபம் குறையும். ஆத்மலாபத்திற்கு வேண்டிய முதல் சேரும். இந்தத் தர்மங்களை கை, கால் முதலிய கரணங்கள் இருக்கிறபொழுதே செய்து கடனை அடைத்து முதலையும் சேர்க்க வேண்டும். அவை போனபின் செய்வதென்றால் முடியாது.

**(கீதை VIII-10)**

என்று சொல்லப்படுகிறது. இந்த உடம்பைவிட்டு நாம் பிரயாணம் செய்யும்பொழுது, மனம் அசையக்கூடாது. மலைபோல் இருக்க வேண்டும். பாப பயம் இல்லாவிட்டால் அப்படி இருக்கலாம். காமமும், க்ரோதமும் இல்லையானால் அந்தப் பயம் இல்லை. தர்மம் செய்து வந்தால் அவை அடங்கும். நாம் பண்ணும் பாபங்களைப் பார்த்தால் நமக்குச் சாதம்கூடக் கிடைக்கக் கூட. அவ்வளவு பாபங்கள் செய்கிறோம். பகவான் பரம கருணை உடையவராகையால், இவ்வளவு சௌகர்யங்கள் பாபிகளாகிய நமக்கும் கிடைக்கின்றன. ஆதலால் பாபத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும். எல்லாவற்றையும் அவருக்கு அர்ப்பணம் செய்து விடவேண்டும். அவர் ஆத்மாவுக்குள் இருக்கிறார். அவருக்கு உடம்பு முதலியவற்றை அர்ப்பணம் செய்வதால் ஆசை அற்றுவிடுகிறது. அப்பொழுது பாபம் இல்லை. பாபம் இல்லாதபொழுது ஸ்திரமான சௌக்கியம் உண்டாகிறது.

*****

# சித்திரை விஷு – கணி காணுதல்

- ஸ்ரீமதி பாமா வேணுகோபால்



சித்திரை வருடப் பிறப்பின் ஒரு முக்கிய அங்கம் தான் "கணி காணுதல்" அப்படி என்றால் என்ன?

கணி என்றால் "நல்லது", காணுதல் என்றால் "பார்ப்பது" அதாவது "நல்லதைக் காணுதல்" என்று பொருள்.

வருஷப் பிறப்பின் முதல்நாள் இரவே, தங்கள் வீட்டின் சுவாமி ரூமை சுத்தம் செய்து, துடைத்து இயன்றவரை அலங்கரிக்கவும். மாக்கோலம், மணைக்கோலம் போட்டு, ஒரு தாம்பாளம் பலகையின் மேல் வைத்து, அதில் பச்சரிசி, பருப்பு, உப்பு, சில காய்கறிகள், முக்கனிகள், வெள்ளரிப்பழம், தொடுத்த மலர் சாரங்கள், உதிரிப்பூ, தங்கள் இல்லத்தில் உள்ள தங்க, வெள்ளி நகைகள், புதிய வேஷ்டி, புடவை முதலியவற்றை வைக்க வேண்டும். இதனை முதல் நாள் இரவே முறைப்படுத்தி வைத்த பாட்டி, அம்மா ஆகியோர் அன்றிரவு சுவாமி அறையிலேயே படுத்துக் கொள்வார்கள். அதிகாலை 4-மணிக்கு எழுந்திருந்த உடனே. முதலில் விளக்கு ஏற்றி வைத்து, பின் அங்கே வைக்கப்பட்டுள்ள முகம் பார்க்கும் கண்ணாடியில் மேற்கண்ட மங்கள பொருட்களை பார்த்து விட்டு பின் வீட்டில் உள்ள பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை எழுப்பி. கண்ணை திறக்காமல் வா என அழைத்து வந்து, இந்த மங்கல பொருட்களை எல்லாம் பார்க்கச் செய்வர். பிறகு ஸ்வாமிக்கு நமஸ்காரம் செய்துவிட்டு குளிப்பது போன்ற மற்ற அன்றாட அலுவல்களை கவனிக்க சென்று விடுவார்கள்.

ஆக, புத்தாண்டின் முதல்காலை மங்களகரமாக ஆரம்பிக்க வேண்டும் என்பதே இதன் தாத்பர்யம். இதில் தெய்வ நம்பிக்கையோடு மனோதத்துவ ரீதியிலும் நன்மை பயக்கும் விஷயங்கள் இருக்கிறது. நமது முன்னோர்கள் கண்ட முறை. நன்மை இல்லாமல் இருக்குமா?

எனவே தங்கள் இல்லங்களில் தங்கள் சக்திக்குத் தக்கவாறு மேற்கண்ட மங்கள பொருட்களை வைத்து, புத்தாண்டின் முதல் நாளை துவங்குவோம். ஆண்டு முழுவதும் நம் இல்லத்தில் மங்களம் பொங்கட்டும்.

*"பொங்கும் மங்களம், எங்கும் தங்குக"*

*****

# நல்லதோர் அறிமுகம்

சமீபத்தில் திரு காளைராஜன் என்பவர் அறிமுகம் கிடைத்தது. இவர் காரைக்குடி அழகப்ப பல்கலை கழகத்தில் துணை பதிவாளராக (Deputy Registrar) பணியாற்றி ஓய்வு பெற்றவர். தமிழ் அறிஞர் கோவில்கள் பற்றி சில புத்தகங்களை எழுதி உள்ளார். தொலைபேசியில் பேசும்போது சில விஷயங்களை சொன்னார். அதில் இவர் ராமேஸ்வரம் முதல் காசி வரை 110 நாட்கள் பாத யாத்திரையாக சென்றுவந்தேன் என்றார். கொஞ்சம் திடுக்கிட்ட நான், அவர் சொன்ன இன்னொரு தகவல் மிகவும் அதிர்ச்சி அடைய செய்தது. அதாவது அவர்களை வழிநடத்தி சென்ற குருசாமி காசி ஸ்ரீ பச்சை காவடி ஸ்வாமிகள் இதுவரை 12 முறை ராமேஸ்வரம் – காசி நடந்து சென்று உள்ளார் என்பதுதான் அது.




படம்: "ராமேசுவரம் காசி பாதயாத்திரை" புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டது. அனுப்பியவர்: அன்பு நண்பர் காளைராஜன்.

ஒரு லாரி, 3 சமையல்காரர்கள், ஓட்டுனர் மற்றும் கூட 19 பேர் நடைபயணம். தினம் 3 வேலை உணவு, காபி, டீ, பிஸ்கட், மிகவும் கட்டுப்பாடு, காசியில் ஆலய தரிசனங்கள், செய்ய வேண்டிய விஷயங்கள். இவர் செலவு அனைவருக்கும். பின் திரும்பி வர 19-பேருக்கும்

இரண்டாம் வகுப்பு தூங்கும் வசதியோடு ராமேஸ்வரம் வரை ரயில் டிக்கெட். எல்லாம் இவர் செலவு என்றார். இது தவிர 3 முறை சபரிமலை பெரிய பாதையில் நடைபயணம், ஆறுபடை வீடு, வைத்தீஸ்வரன் கோவில், சிங்கப்பூர் வரை கப்பலில் சென்று அங்கிருந்து மலேசிய முருகன் கோவிலுக்கு நடை, 6 முறை காஞ்சி வந்து மஹாபெரியவாளை சந்தித்து இருக்கார். 12 வயதில் ஆரம்பித்த நடைபயணம். தற்சமயம் அவர் வயது 70, இதுவரை 1,35,000 கிலோமீட்டருக்கு மேல் நடந்து இருக்கார். அவரிடம் கூட போனில் பேசினேன். இவை எல்லாமே எனக்கு பெரியவா அனுகிரஹத்தால் கிடைத்தது.

இவை எல்லாம் தற்காலத்தில் ஆனால், 1830 மே 18-ஆம் தேதி தொடங்கி, 1831 செப்டம்பர் மாதம் மீண்டு தமிழகம் வந்துள்ளார். ஒருவருடம் 3 மாதம் யாத்திரை. "ஸ்ரீ யனுகுல வீராசாமி" என்ற இவர் "நியோகி பிராமண குலத்தில் - உதித்தவர். பரம்பரையாகவே பெரிய தனவந்தர். அதுவுமின்றி கிழக்கிந்திய வர்த்தக கம்பெனியில், சென்னையில் உயர்பதவி வகித்தவர். இவர் தனது குடும்பம், சுற்றம், வேலைக்காரர்கள் என 50 பேரோடு யாத்திரை செய்துள்ளார். தேதி வாரியாக பயண விவரம். வேதம் அறிந்தவர், ஆயுர்வேதம் சிகிச்சை அறிந்தவர். காட்டு வழியில் கள்வர் பயம் இருக்கும் என்பதால் தன்னோடு பத்து அடியாட்களையும் அழைத்து சென்று இருக்கார். அவர்களுக்கு அப்போதே 7/- ரூபாய் சம்பளம். அற்புதமான தகவல்களை தந்து இருக்கார். நதிதீரத்தில் வாழ்ந்த வேதமோதிய அந்தணர்களின் வாழ்க்கை அவர்கள் இவர்களுக்கு செய்த உபகாரம். அந்த காலத்தில் காசியில் கால்வைக்கவே வாங்கிய நுழைவு கட்டணம் இப்படி ஏராள தகவல்கள். தெலுங்கு மொழியில் எழுதப்பட்டது. பின்னர் தமிழில், ஆனால் புத்தகமாக வரவில்லை. பின் ஆந்திர அரசாங்கம் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளிட்டு உள்ளது. எனக்கு இதனை தமிழில் மொழிபெயர்க்க ஆசை. அனுமதி கோரி கடிதம் எழுதி உள்ளேன். பெரியவாளின் அனுக்கிரஹம் வேண்டும்.



https://goo.gl/maps/hvdgNhV8E1xQn728A
இன்றைய பயணம் தேவிபட்டிணத்திலிருந்து புறப்பட்டு சனவேலி வழியாகத் திருவாடானை கைகாட்டி அருகே உள்ள சின்னக்கீரமங்கலம் வந்து தங்குதல். சுமார் 36 கி.மீ.

படம்: "ராமேசுவரம் காசி பாதயாத்திரை" புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டது. அனுப்பியவர்: அன்பு நண்பர் காளைராஜன்.

மேலும் மஹாபெரியவா ஸ்தல புராணங்களின் முக்கியத்துவத்தை பற்றி நிறைய சொல்லி உள்ளார். செய்து இருக்கார். ஸ்ரீ பாலா பெரியவாளுக்கு அதற்க்கு முக்கியத்துவம் தருவதோடு ஸ்ரீ கண்ணன் அவர்கள் அதுபற்றி பேசி வருகிறார். நான் போன வருஷம் முதலே பழைய புஸ்தக கடை, இனைய தளம் இவற்றில் தேடி ஏறத்தாழ 150 ஸ்தலங்களின் புராணங்களை வைத்து இருக்கிறேன், நிறைய செய்யணும்.

கடைசியாக இந்த வாரம் இளையாத்தங்குடி செல்கிறேன். அங்கே உள்ள அத்யாபகர் பாடசாலைக்கு சில பொருட்கள் கேட்டு இருக்கார். அங்கே சில வ்ருக்ஷங்கள், பூச்செடிகள் எடுத்து போகிறேன். எல்லாம் பெரியவா அனுக்கிரஹம்.

*****

# பொறுத்தார் பூமி ஆள்வார்

ஒரு ஊரில் ஒரு வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் எவ்வளவோ முயற்சிகள் செய்து பல தொழில்களைச் செய்தான.; ஆனால் அவனுக்கு திருப்திகரமான இலாபம் என்பது கிடைக்காமலே இருந்தது. எத்தனை முயற்சிகள் செய்தும் அவன் நினைத்தது நடக்கவில்லை என்று அவன் வருந்திய போது அவனுடைய மனைவி அந்த ஊரில் குளக்கரையிலுள்ள மரத்தின் கீழ் ஒர் முனிவர் இருப்பதாகவும் அவரிடம் சென்று ஏற்ற உபாயம் கேட்டு வரலாமென்றும் ஆலோசனை கூறினாள். வியாபாரி அதை ஏற்று குளக்கரைக்குச் சென்றான். முனிவரைக் கண்டான்.

தனது குறைகளை எல்லாம் கூறி அவரிடம் ஏதாவது பரிகாரம் செய்யுமாறு கேட்டான். முனிவரும் புன்முறுவலோடுஇ "உனது தொழிலில் இத்தனை முயற்சிகள் எடுத்தும் உனக்குத் தேவையான எதிர்பார்த்த இலாபம் வராததற்கு காரணம் என்ன என்று அறிந்து கொண்டால் நீ சமாதானம் அடைவாய் அல்லவா?" என்று கேட்டார். அவனும் தயவுசெய்து அதற்கு ஒரு வழி செய்யுமாறு வேண்டினான்.

முனிவரும் அவனிடத்தில் குளக்கரைக்கு மேலே உள்ள அரச மரத்தடியில் ஒரு பிள்ளையார் இருப்பதாகவும் அந்த பிள்ளையாருக்கு குளத்தில் இருந்து நூறு குடம் தண்ணீரை எடுத்து அபிசேகம் செய்தால் பிள்ளையார் அவன் முன் தோன்றி வரம் தருவார் என்று கூறினார். வியாபாரியும் அவரை வணங்கி பிள்ளையாருக்கு அபிசேகம் செய்வதற்கு தலைப்பட்டான்.

குளத்திலிருந்து குடத்தில் தண்ணீர் எடுத்து தோளில் சுமந்தபடியே குளக்கரையிலுள்ள பல படிக்கட்டுகளைத் தாண்டி மேலே சென்று மரத்தடியிலுள்ள பிள்ளையாருக்கு முதல் குடம் தண்ணீரை அபிசேகம் செய்தான். தொடர்ச்சியாக அடுத்தடுத்து ஒவ்வொரு குடமாக எடுத்து வந்து அபிசேகம் செய்ய ஆரம்பித்தான் நேரம் ஒடியது அவனும் சோர்வடைந்தான், பகுதி அபிசேகம் முடிந்தவுடன் அவனுடைய பொறுமை கொஞ்சம் nhஞ்சமாக குறைய ஆரம்பித்தது. நூறு குடம் அபிசேகம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மாறி இன்னும் எத்தனை குடங்கள் தண்ணீர் சுமக்க வேண்டும் என்ற கறடமே; மனதில் நிறைந்திருந்தது. அப்படி இப்படி என்று தொண்ணூறு குடங்கள் முடிவடைந்தது. மீதியுள்ள பத்து குடங்கள் சுமக்கும் போது முனிவர் சொன்னது போல நூறு குடங்கள் முடிந்தவுடன் பிள்ளையார் காட்சி தருவாரா என்ற மிகப் பெரிய சந்தேகமும், வினாவும் அவனுள் எழுந்தது தொண்ணூற்று ஒன்பது குடங்கள் முடிந்தன. நூறாவது குடத்தை எடுத்து தண்ணீருடன் தோளில் சுமந்தபடியே தள்ளாடி தள்ளாடி படிகளின் மீது ஏறி பிள்ளையாரை வந்தடைந்தான் களைப்பும். எரிச்சலும் ஒன்று சேர நூறாவது குடநீரை பிள்ளையாருக்கு வேண்டா வெறுப்பாக அபிசேகம் செய்து "அப்பாடி முடிந்தது" என்று குடத்தை எரிச்சலோடு பிள்ளையார் தலையில் போட்டான். அடுத்த நொடியில் அவன் முன் பிள்ளையார் ஆவேசத்துடன் தோன்றினார். அவர் தோன்றியதைக் கண்டு அவருடைய கோபம் தோய்ந்த கண்களின் முன் வியாபாரி வெலவெலத்து நின்றான். பிள்ளையாரோ, "எதற்காக இப்படி செய்தாய?" உன்னுடைய பொறுமையின்மையின் காரணமாக நீ எந்த வரத்தை வேண்டி என்னை அழைத்தாயோ அதற்கு பதிலாக உனக்கு நான் சாபம்தான் கொடுக்க

வேண்டும். இருப்பினும் நான் அப்படி செய்யாமல் நீ திருந்துவதற்கு வாய்ப்பு அளித்து செல்கிறேன். உன்னைத் திருத்திக் கொள்” என்று கூறி மறைந்தார். வியாபாரியோ பெரும் சோகத்தோடு முனிவரிடம் வந்து நடந்தவற்றைக் கூறினான். தான் செய்த தவறுக்கு வருந்தினான். முனிவரோ அவனிடத்தில், “இப்பொழுது உனக்கு புரிகிறதா? நீ எத்தனை சிரமப்பட்டு தொழில் செய்தாலும் அதை உன் மனதார இறடப்பட்டு செய்வதில்லை. அதிலுள்ள கற்டங்களையும், குறைகளையும் மட்டுமே அதிகம் எண்ணுகிறாய் இலாபம் வரும் வரையிலும் காத்திருக்கும் பொறுமையும் உன்னிடம் இல்லை எனவேதான் உனக்கு எத்தனை தொழில் செய்தாலும் ஏற்ற திருப்தி கிடைப்பதில்லை என்று கூறி இனியாவது புரிந்து நடந்து கொள் பொறுமை உன்னை உயர்த்தும்” என்று வாழ்த்தினார்.

அன்பர்களே! நம்மில் பலர் பல தொழில்களையும் அலுவலக வேலைகளையும் இற்டப்பட்டு செய்வதை விடுத்து கற்டப்பட்டு செய்வதாக புலம்பி கொண்டு உள்ளார்கள். தங்களுக்குரியது கிடைக்கும் வரை காத்திருக்கும் பொறுமையும் அவர்களுக்கு இல்லை இற்டப்பட்டு செய்து பொறுமையைக் கடைப்பிடித்தால் எல்லா நன்மைகளும் வந்து சேரும் என்ற கொள்கையை நாம் கடைபிடிக்க வேண்டும். இதை தான் நம் முன்னோர்கள் கற்டப்பட்டு செய்யும் காரியத்தை இற்டப்பட்டு செய்தால் அதன் கற்டம் தெரியாது என்று பொறுத்தார் பூமி ஆள்வார் என்றும் கூறினார்கள்.

அன்புடன்

மனோகர்


குவைத்

*****

# வழி காட்டினார் வரதர்

Hi Friends, நான் உங்கள் கணேஷ் ராகவ் மீண்டும் இந்த தளத்தில் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி, கடவுளிடம் நான் எப்படி நெருங்கினேன் என்று தான் இந்த பதிவு இருக்கப்போகிறது அதனுடன் சிறிது YouTube பற்றி சில தகவல்களும் இருக்கும், இந்த பதிவு சுவாரசியமாக இல்லாவிட்டாலும், கண்டிப்பாக பயனுள்ளதாக இருக்கும்.

கல்லூரி படிப்பை முடித்துவிட்டு நீண்ட காலம் கழித்து எனக்கு ஒரு வேலைக் கிடைத்தது, Quality Engineer வேறு வழி இல்லாமல் ஏதாவது செய்ய வேண்டும் என்று வேலைக்கு சென்று வந்தேன், நிறைய கற்றுக்கொண்டேன் ஆனால் இந்த துறையில் எனக்கு அதிகம் நாட்டம் இல்லை, பணம் வாழ்க்கை இல்லை வாழ பணம் வேண்டும் என்று புரிந்து கொண்டேன் , விமான படை வீரர்கள் தேர்வு, போன்ற Officers Grade தேர்வுகளுக்கு முயற்சி செய்து தோல்வியை கண்டேன், இது விடுத்து நிறைய அரசு தேர்வுகள் என்று முயற்சிகள் தொடர்ந்தன, 2018 Forest Officer தேர்வு அறிவிக்கப்பட்டது இந்த வேலை எனக்கு தான் என்று முடிவு செய்து கடும் பயிற்சி செய்து அதிலும் தோல்வி , இந்த தோல்வி என்னை பாதித்தது இதில் இருந்து வெளிவருவதற்கு ஒரு YouTube Channel துடங்கினேன் அதை ஒரு பொழுதுபோக்கு அங்கமாக வைத்து மீண்டும் தேர்வுகளுக்கு முயற்சி செய்து வந்தேன் , நான் என் முதல் கட்டுரையில் நல்லவனாக இருப்பது அவ்வளவு முக்கியம் என்று பகிர்ந்து கொண்டேன் அப்படி இருந்தால் கடவுள் உங்களுடன் சேர்ந்து கொள்ளுவார்கள் , அப்படி தான் எனக்கும் நடந்தது.




படம்: கணேஷ் ராகவ் யூடியூப் ஒளிஉரு பதிவு பட்டியல்

YouTube Channel ஆரம்பித்து நான் செய்யும் பயணம் மற்றும் சில தகவல்களை பகிர்ந்து வந்தேன், அனைத்து YouTube Channel-லும் ஒரு காலகட்டத்தில் பிரபலமாகும் அது ஒரு காணொளியில் நடக்கும் அது வரை நம் மனம் தளராமல் எதையும் எதிர் பார்க்காமல் வாரத்துக்கு இரண்டு காணொளி பதிவிட வேண்டும் ஒரு காணொளி கண்டிப்பாக மக்கள் மனதைக் கவரும், எனக்கு அந்த ஒரு காணொளியாக அத்திவரதர் காணொளி அமைந்தது, அத்திவரதர் 48 நாள் திருவிழாவையும் தகவல்களையும் மக்களிடம் பகிர்ந்து வந்தேன், மக்களிடம் இருந்து அப்படி ஒரு அன்பும் ஆதரவும் நான் எதிர்பார்க்கவில்லை நான் வரதராஜப் பெருமாளை சற்று நெருங்கினேன் அவர் என்னை இழுத்துக் அனைத்து கொண்டார், இதற்கு முன் இந்த ஒரு பணியை யார் செய்தார்கள் என்று யோசித்து பாருங்கள். அவர் புகழை மக்களிடம் கொண்டு சேர்க்க என்னை அவர் தேர்வு செய்தார் அதுவே மிக பெரிய பாக்கியம் அதனுடன் மக்களின் அன்பும் ஆதரவும். இது என்ன பெரிய விஷயமா உன்னை விட நல்ல பெரிய channelகள் இங்கு இருக்கு என்று திங்கள் நினைக்கலாம் ஆனால் யோசித்து பாருங்கள் மனிதனுக்கு அனுபவங்களை கொட்டி கொடுப்பது பயணங்கள் அதிலும் ஆன்மீக பயணம் செய்து அதை உங்களிடம் பகிர்ந்து கொள்வது மிக பெரிய குடுப்பினை.



படம்: (இடது) ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் உத்ஸவர், (வலது) ஸ்ரீ வரதராஜப் பெருமாள் பல்லவ உத்சவ மூர்த்தி.

இதில் எனக்கு பெரிய பணம் புகழ் வராவிட்டாலும் இந்த பணியில் உள்ள மனநிறைவை வேறு எந்த பணியும் அளித்து இருக்காது, இன்னும் நிறைய அனுபவங்களை அடுத்த அடுத்த பதிவில் பார்ப்போம்…

*****

# பலன் தரும் பதிகங்கள்

திருச்சிற்றம்பலம்

அனைவருக்கும் நமஸ்காரம்,

எழுத்துக்களுக்கு எல்லாம் முதல் எழுத்தாக அமைவது 'அ' மனிதனுடைய வாழ்க்கை எல்லாவற்றிற்கும் முதலாக அமைவது அம்மா அதனால் “அன்னையும் பிதாவும் முன்னறித் தெய்வம்” என்றார்கள் ஒரு பெண்ணானவள் மகளாய் பெற்றவர்கள் மீதும், சகோதரியாய் அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகள் மீதும், மனைவியாய் கணவன் மீதும். மருமகளாய் குடும்பத்தின் மீதும், தாயாய் குழந்தைகளின் மீதும் பாசத்தைப் பொழிகின்றாள். மாணவர்கள் தேர்வில் வெற்றி பெறவேண்டுமென்று அயராது படித்துத் தேர்வு எழுதுகின்றனர். தேர்வு முடிவுகள் வெளிவந்து மதிப்பெண்களைக் கண்டு அவர்கள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை பெண்களும் தாங்கள் தாய்மை அடைந்தவுடன் நாள்தோறும் கண்ணை இமை காப்பது போல தன் வயிற்றில் வளரும் சிசுவை பாதுகாக்கிறார்கள். மேலும் பத்து மாதம் முழுவதும் பகல் இரவு என்று பாராமல் தன் குழந்தை நன்றாக பிறக்க வேண்டும் என்றே எப்போதும் எண்ணுகின்றாள். ஒரு பெண்ணிற்கு பிரசவம் என்பது மறுபிறவி என்றே கூறுவார்கள் எனவே பிரசவம் நன்றாக நடைபெற பலன் தரும் பதிகங்களிலுள்ள பிரசவம் இனிதே நடைபெறும் பதிகத்தைப் பக்தியுடனும் நம்பிக்கையுடனும் பாராயணம் செய்து பலனைப் பெறலாம் இப்பதிகத்தைப் பற்றி இறைவனின் பாதக் கமலங்களை வேண்டி இத்தொடரில் எழுதுகின்றேன்.



இடம்: ஸ்ரீ அக்னீஸ்வரர் ஆலயம், களக்காட்டூர், காஞ்சிபுரம்

## *பதிகம் - 4*

## *பிரசவம் இனிதே நடைபெற வேண்டும் பதிகம்*

“பெற்றெடுத்த உள்ளம் என்றும் தெய்வம்”
“பத்துமாதம் சுமந்திருந்துப் பெற்றாள்”
“அம்மா என்றழைக்காத உயிரில்லையே”
“உலகத்தில் சிறந்தது தாய்மை”

என்பவை எல்லோராலும் அறிந்த திரைப்படப் பாடல்கள். இதன் மூலம் நாம் தாய்மையைப் பற்றி அறியலாம். மேலும் செல்லும் இடத்திற்கு கட்டணத்தைக் குறைக்காமல் கேட்கும் ஆட்டோ ஒட்டுநர்களே “பிரசவத்திற்கு இலவசம்” என்று பிரசவத்தின் மகத்துவத்தை உணர்ந்து தாய்மார்களுக்கு உதவி செய்கிறார்கள்.

**பதிக வரலாறு**

திருச்சிராப்பள்ளியில் காவிரி ஆற்றின் தென் கரையில் புகழ்பெற்ற ஒரு சிவத்தலம் தாயுமானவர் சிவத்தலம் இக்கோவில் மலை மேல் உள்ளது. காவிரி ஆற்றின் வடகரையில் மிகுந்த இறைபக்தியுடைய பெண் ஒருவள் வாழ்ந்து வந்தாள். அவள் தாய்மை அடைந்து இருந்தாள் அவளுடைய கணவர் வேலை நிமித்தமாக வெளியூர் சென்று விட்டார். அவளின் தாய், தந்தையர் அவளுடைய பிரசவக் காலத்திற்கு வருவதாக இருந்தது அப்போது காவிரி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஒடியதால் அவர்களால் மகளைக் காண வர இயலாமல் போயிற்று. பெண்ணிற்கு பிரசவ வலி ஏற்பட்டு துடித்தாள.; இறைவனை வேண்டினாள் இறைவன் அவளின் தாயின் வடிவத்தில் வந்து அவளுக்கு மருத்துவம் செய்து பிரசவம் பார்த்தார். அதனால்தான் இங்குள்ள இறைவனை “தாயுமானவர்” என்று அழைக்கிறோம். திருஞானசம்பந்தர் இத்தலத்தது இறைவனை வழிபட்டு பாடப்பெற்ற இப்பதிகத்தை நம்பிக்கையுடனும் பக்தியுடனும் பாராயணம் செய்தால் பிரசவம் இனிதே நடைபெறும் என்பது உண்மையாகும்.

**திருச்சிராப்பள்ளி** **பண்: குறிஞ்சி**

நன்றுடையானைத் தீயதிலானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளி
குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிரும்மே

கைம்மகவேந்தி கடுவனோடு ஊடிக்கழைப்பாய் வான்
செம்முக மந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத்து ஈருரி போர்த்த விகிர்தாநீ
பைம்முக நாகம் மதியுடன் வைத்தல் பழியன்றே

மந்தம் முழவம் மழலை ததும்ப வரைநீழல்
செந்தண் புனமும் சுனையும் சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம் மலர்கள் சடைமேலுடையார் விடையூரும்
எந்தம் அடிகள் அடியார்க்கு அல்லல் இல்லையே

துறைமல்கு சாரல் சுனைமல்கு நீலத்திடை வைகிச்
சிறைமல்கு வண்டும் தும்பியும் பாடும் சிராப்பள்ளிக்
கறைமல்கு கண்டன் கனலெரியாடுங் கடவுள்எம்
பிறைமல்கு சென்னி யுடையவன் எங்கள் பெருமானே

கொலை வரையாத கொள்கையர் தங்கள்மதில் மூன்றும்
சிலைவரையாகச் செற்றனரேனும் சிராப்பள்ளித்
தலைவரை நாளும் தலைவரல்லாமை உரைப்பீர்காள்
நிலவரை நீலமுண்டதும் வெள்ளை நிறமாமே

வெய்யதண் சாரல் விரிநிற வேங்கைத் தண்போது
செய்ய பொன்சேரும் சிராப்பள்ளி மேயசெல்வனார்
தையலோர் பாகம் மகிழ்வர் நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமுங் கொள்வர் ஆரிவர் செய்கை அறிவாரே

வேயுயர் சாரல் கருவிரலூகம் விளையாடும்
சேயுயர் கோயிற் சிராப்பள்ளி மேய செல்வனார்
பேயுயர் கொள்ளி கை விளக்காகப் பெருமானார்
தீயுகந்தாடல்திருக்குறிப்பாயிற் றாகாதே

மலைமல்கு தோளன் வலிகெடவூன்றி மலரோன்தன்
தலைகலனாகப் பலிதிரிந்துண்பர் பழியோரார்
சொலவல வேதஞ் சொலவல கீதஞ் சொல்லுங்கால்
சிலவல போலுஞ் சிராப்பள்ளிச் சேடர் செய்கையே

அரப்பள்ளியானும் மலர் உறைவானும் அறியாமைக்
கரப்புள்ளி மேய வார்சடைச் செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீர் உம்மை யேதிலர் கண்டால் இகழாரே

நாணாது உடை நீர்த்தோர்களுங் கஞ்சி நாட்காலை
ஊணாப் பகல் உண்டு ஓதுவார்கள் உரைக்குஞ் சொல்
பேணாது உறுசீர் பெறுதும் என்பீர் எம்பெருமானார்
சேணார் கோயில் சிராப்பள்ளி சென்று சேர்மினே

தேனயம் பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரை சூழ்ந்த
கானல் சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்தன் நலமிகு பாடல் இவைவல்லார்
வானசம்பந்தத் தவரோடு மன்னி வாழ்வாரே.

**வாழ்க்கை அனுபவம்**

இப்பதிகத்தை நம்பிக்கையுடன் மனமுருகி பாராயணம் செய்தவர்கள் பலன் பெற்றுள்ளதற்கு பல சான்றுகள் உள்ளன. அவற்றில் ஒன்றை எழுதுகின்றேன்.

ஒரு தாய்க்கு இரண்டு மகள்கள் மூத்த மகள் வேலைக்கு செல்பவர் இளைய மகளுக்கு திருமணமாகி பிரசவத்திற்காக தாய் வீட்டிற்கு வந்தார். அன்று பிரதோசம், மூத்த மகள் வேலை முடிந்து கோவிலுக்கு சென்று விட்டு வீடு திரும்பினார். அப்போது சகோதரிக்கு திடீரென்று அதிக அளவில் உதிரபோக்கு ஏற்பட்டு தாய் செய்வதறியாமல் திகைத்து நின்றாள். வீட்டிற்கு வந்த மூத்த சகோதரி உடனே மருத்துவமனைக்குச் செல்லலாம் என்று கூறினார். ஆனால் அவர்கள் வீட்டிற்கு அருகில் ஆட்டோ கிடைப்பதற்கு வழியில்லை மனதில் இறைவனை வேண்டி மூத்த சகோதரி தாயையும், தங்கையையும் அழைத்து கொண்டு வீட்டை பூட்டினார். அப்போது ஒரு கார் அவர்கள் வீட்டிற்கு அருகில் வந்து நின்றது. ஒரு அதிகாரியை அவரது வீட்டில் விட்டுவரும் போது வழியில் இவர்களைப் பார்த்து கார் நின்றது. மூத்தவளைப் பார்த்து டிரைவர் கைலாசம் "ஏன் இப்படி மிகவும் பதற்றத்துடன் இருக்கிறீர்களா?" என்றார். அதற்கு அவள் சகோதரியை பிரசவத்திற்கு மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டும் ஆட்டோவை கூட்டி வர தொலை தூரம் செல்ல வேண்டும் என்றாள். உடனே அவர் "வாருங்கள் நான் உங்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்கிறேன்" என்றார். உடனே காரில் ஏறி மருத்துவமனையை அடைந்தார்கள். டிரைவருக்கு நன்றி செலுத்தினார்கள். டிரைவர் வடிவில் இறைவன் உதவினார் என்று எண்ணினார்கள்.

மருத்துவமனையில் இருந்த மருத்துவர் சகோதரியை பரிசோதித்து மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதே உடனே அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றார். ஆனால் அறுவை சிகிச்சை செய்யும் மருததுவர் விடுப்பில் ஊருக்கு சென்றுவிட்டார். என்ன செய்வது என்று தெரியாமல் யோசித்தனர். மூத்த சகோதரி "டாக்டர் எப்படியாவது என் தங்கையைக் காப்பாற்றுங்கள்" என்று கண்ணீர் மல்க கூறினாள். அப்போது அருகிலிருந்த நர்ஸ் டாக்டரிடம் இன்று ஒரு மருத்துவர்கள் கூட்டம் நடைபெற்றதே. நீங்கள் அந்த இடத்திற்கு போன் செய்து உதவி கேட்கலாமே என்று யோசனை கூறினார். டாக்டரும் உடனே அந்த இடத்திற்கு போன் செய்து நிலைமையை கூறினார். ஆனால் அங்கிருந்த டாக்டர்கள் அனைவரும் ஒரு விருந்துக்கு சென்று விட்டார்கள் வரவேற்பறையில் அமர்ந்திருந்த வெளியூரில் இருந்து வந்த டாக்டரம்மா ஒருவரின் காதில் இது விழுந்தது. உடனே அவர் நான் வருகிறேன். என்று கூறி காரில் ஏறி விரைவாக மருத்துவமனைக்கு வந்தார்.

அவசர அவசரமாக ஆபரேசன் தியேட்டரில் எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றது, டாக்டரம்மா வருவதை கண்ட மூத்த சகோதரி "அம்மா என் தங்கையைக் காப்பாற்றுங்கள்"; என்றார்.

டாக்டரம்மா உள்ளே சென்றார். ஆபரேசன் தொடங்கியது மூத்த சகோதரி தன் கைப்பையில் வைத்திருந்த பிரசவம் இனிதே நடைபெற உதவும் பதிகத்தை ஆபரேசன் தியேட்டர் வாசலிலேயே நின்று படித்து இறைவனை வேண்டினார். நேரம் ஒடியது டாக்டரம்மா செய்த ஆபரேசன் மூலம் தங்கைக்கு ஆண் குழந்தை பிறந்தது. நர்ஸ் வந்து தகவல் சொன்னார். பிறகு சற்று நேரம் கழித்து டாக்டரம்மா வெளியே வந்தார். மூத்த சகோதரி கரம் கூப்பி கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தார். டாக்டரம்மா சிரித்தவாறே சென்று விட்டார். நர்ஸ் வந்தார் மூத்த சகோதரி அவரிடம் “இந்த டாக்டரம்மா எப்படி வந்தார்கள்? அவர்கள் பெயர் என்ன?” என்று கேட்டார். அதற்கு நர்ஸ் “மருத்துவர்கள் கூட்டத்திற்காக வெளியூரில் இருந்து வந்த இந்த டாக்டரம்மா அறுவை சிகிச்சை செய்வதில் சிறந்தவர் விபரம் கேள்விபட்டு உடனே வந்து உதவி செய்தார். அவர் பெயர் உமா மகேஸ்வரி” என்றார். தாயும் மகளும் இறைவனை வேண்டினால் எந்த வழியிலும் உதவுவார் என்று எண்ணி இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

அன்பர்களே! இந்த பதிகத்தின் மகிமையை என்னென்று சொல்வது நீங்களும் மனமுருகி நம்பிக்கையுடன் பதிகங்களை பாராயணம் செய்து பலன் பெறுவீர்களாக இன்னும் மற்றொரு பதிகத்தில் மீண்டும் சந்திப்போம்.

அனைவருக்கும் நன்றி

திருச்சிற்றம்பலம்

அன்புடன்<br>கலாவதி, ஊட்டி

# தெரிந்த புராணம், தெரியாத கதைகள்

மகாபாரதம் அனைவருக்கும் தெரிந்த புராணமே. அதுவும் தற்போது தொடர்ந்து வரும் ஊரடங்கு காலகட்டத்தில் இந்த மகா புராணத்தை சிறியவர் முதல் பெரியவர் வரை விரும்பி பார்த்தோ, படித்தோ, கேட்டோ மகிழ்ந்தனர். கடந்த இதழில் "மகாபாரத கொடிவழி" பற்றி தெரிந்து கொண்டோம். இனிவரும் நாட்களில், இப்புராணத்தில் இருந்து பெரும்பாலும் தெரியாத கதைகள் பற்றி பார்ப்போம். எனக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் என் அம்மா, அப்பாவுக்கு நன்றி.

மஹாபாரத கதாபாத்திரங்களும் அவர்களின் முன்ஜென்மமும்



அனைவருக்கும் இப்புராணத்தில் உள்ள சில கதாபாத்திரங்களின் முன் ஜென்ம அவதாரமும், அவர் யாரின் அவதாரம் என்றும் தெரியும். உதாரணத்திற்கு கிருஷ்ணர், முன் ஜென்மத்தில் ஸ்ரீ ராமராக பிறந்தார் எனவும் அவர் விஷ்ணுவின் அவதாரம் எனவும் தெரியும். பலராமர் முன் ஜென்மத்தில் லக்ஷ்மானராக பிறந்தார் எனவும் அவர் ஆதிசேஷனின் அவதாரம் எனவும் தெரியும். இதுபோல் சில கிளை கதைகளுடன் இந்த புராணத்தில் இருக்கும் கதாபாத்திரங்களின் முன்ஜென்மத்தைப் பற்றி அறிவோம்.

- **ருக்மணி -** மகாலட்சுமியின் அவதாரம். அவர் முன்ஜென்மத்தில் சீதையாக பிறந்தார்
- **சத்யபாமா -** பூமாதேவியின் அவதாரம்

- கிருஷ்ணரின் மற்ற மனைவிகள் - **ஜாம்பவதி**, **நக்னசித்தி**, **காளிந்தி**, **மித்திரவிந்தை**, **இலக்குமணை**, **பத்திரை** - அஷ்ட லக்ஷ்மிகளின் அவதாரம்.
- **ராதா** - விஷ்ணுவின் இடது பக்கத்திலிருந்து தோன்றியவர். இவர் லக்ஷ்மியின் பக்தி ரூபம், ருக்மணி சக்தி ரூபம்.
- **கங்கை** - இப்பொழுது அனைவருக்கும் ஒரு சந்தேகம் வரும். அது என்னவென்றால், "கங்கா தேவி சிவபெருமானின் மனைவிதானே எப்படி அவர் சாந்தனுவை மணந்து கொண்டார்?"

ராமரின் சூரிய வம்சத்தில் இருந்த ஒரு அரசன் இந்திரனின் பதவியை பெற வேண்டினான். அதற்க்கு அவன் நூறு அஸ்வமேத யாகங்களை நிகழ்த்த ஆரம்பித்தான். தொன்னூற்று ஒன்பது யாகங்களை முடித்து நூறாவதை தொடங்கினான். அப்போது இந்திரன் அந்த குதிரையை பாதாளத்தில் மறைத்து வைத்தான். அதை அறிந்த அந்த அரசன் அவருடைய அறுபதாயிரம் புதல்வர்களையும் அனுப்பி தேடினார். குதிரை இருக்கும் இடமும் தெரிந்தது, ஒரு தவ முனியின் அருகே நின்றுக் கொண்டிருந்தது. அந்த முனிவர் தான் குதிரையை திருடியிருப்பார் என்று நினைத்து அவரை அவமதித்தனர். கோபத்தில் அந்த முனிவர் அனைவரையும் சாம்பலாக்கினார். அதை அறிந்த அந்த அரசனின் மகன் "பகீரதன்", அவர்களுக்கு மோக்ஷத்தின் வழியை கேட்டான். அதற்கு அவர் தேவலோக நதியான கங்கையை பூமிக்கு கொண்டுவந்து அவர்களின் சாம்பலை அதில் கரைத்தால் நீ வேண்டியது நடக்கும் என கூறினார். பகீரதன் கங்கையை வேண்டி தவமிருந்தான், அப்போது கங்கை நேரடியாக பூமிக்கு வந்தால் பூமிக்கு ஆபத்து, எனவே சிவனின் சடையில் இருந்து பூமிக்கு வது பகீரதி எனும் பெயர் பெற்றால் கங்கை.

ஒரு நாள் தேவலோக சபைக்கு கங்கை, மகாபீஷன், மற்ற தேவர்கள் வந்தார்கள். அப்போது கங்கையும் மகாபீஷனும் ஒருவரை ஒருவர் மெய்மறந்துப் பார்த்துக்கொண்டிருந்தனர். அதனை பார்த்த பிரம்மா அவர்களை பூமியில் பிறந்து கணவன் மனைவியாக வாழ சபித்தார். இதனால் மகாபீஷன், சாந்தனுவாகவும்; கங்கா தேவி கங்கையின் அவதாரமாகவும் பிறந்து தம்பதியாக வாழ்ந்தார்கள்.

மேலும் சில கதாபாத்திரங்களை பற்றி அடுத்த பதிவில் பார்ப்போம்.

அன்புடன்

செல்வி அ. பூஜிதா

*****

# செல்வங்களின் கைவண்ணம்

இறைவனை நினைப்பது, ரசிப்பது, புகழுவது என்று வாழும் மக்களிடையே, இறைவனை அனுபவித்து, ஆராதித்து அவர் உருவத்தை அழகாய் தீட்டிய என் குழந்தைகள் சித்ரா (ஆஸ்திரேலியா) மற்றும் சரஸ்வதி (நியூசீலாந்து) இருவருக்கும் என் ஆசிகள். அவர்களின் ஓவியங்களுக்கு என் நமஸ்கரங்கள்!!!



**“அக்ரிலிக் பெயிண்டிங்” ஓவிய வடிவத்தில் மோஹன கண்ணன்:**

**சித்ரா (ஆஸ்திரேலியா)**



“அக்ரிலிக் பெயிண்டிங்” ஓவிய வடிவத்தில் விநாயக மூர்த்தி:

**சித்ரா (ஆஸ்திரேலியா)**




காம்போஸ்ட்டு என்னும் கலப்பு உரத்தில் விநாயகர் அலங்காரம்:

**சரஸ்வதி (நியூசீலாந்து)**